# மாமரத்தில் கவாத்துச் செய்வதால் நல்ல மகசூலை எடுக்கலாம்



முனைவர். பி. ஜெய்சங்கர்
உதவி பேராசிரியர், தோட்டக்கலைத் துறை,
புஷ்கரம் - வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை - 622 303
மின்னஞ்சல் முகவரி: sankarjai03@gmail.com

விவசாயத்திலேயே ஊறிப்போயிருக்கும் பலருக்கும் கவாத்து என்றால் என்ன என்று தெரிவதில்லை. ஆமாம், கவாத்து என்றால் என்ன? கவாத்து என்பது பழைய பக்க கிளைகளை வெட்டி அதிக அளவில் புதிய கனிகள் மற்றும் மலர்களை பெறும் முறையாகும்.



**மா கவாத்துச் செய்வதால் நல்ல மகசூலை எடுக்கலாம்**

- மா மரங்களைப் பொறுத்தவரைக்கும் கவாத்து மிக முக்கியமானது. மரத்தின் அனைத்துக் கிளைகள் மற்றும் இலைகள் மீதும் வெயில் படவேண்டும். கிளைகளுக்கு இடையில் காற்று உள்ளே போய், வெளியேறும் அளவுக்கு இடைவெளி இருக்க வேண்டும்.
- முதிர்ந்த பழைய கிளைகள் மற்றும் தேவையில்லாத இலைகளை மரத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது. இதனால் மரத்திற்கு கிடைக்கும் சத்துக்கள் விரயமாகும். நடவில் இருந்து மா மரங்களை ஆண்டுதோறும் முறையாக கவாத்து செய்வதன் மூலம், நல்ல மகசூலை எடுக்கலாம்.
- ஆண்டுதோறும் மாமரத்தின் அனைத்து கிளைகளும் பூக்காது. நடப்பாண்டில் பூக்காத கிளைகளைக் கவாத்துச் செய்ய வேண்டும். கவாத்து செய்வதால், மகசூல் அதிகரிப்பதோடு தண்டுத் துளைப்பான் பூச்சியிடம் இருந்தும் மா மரங்களைக் காப்பாற்ற முடியும்.
    - செப்டம்பர் மாதத்தில் மா மரங்கள் கவாத்து அவசியம்
    - அதிகக் கிளைகள், இலைகள் கொண்ட மரங்கள் அதிக மகசூல் கொடுக்காது
    - புதிய கிளைகளை உருவாக்குவதால் மகசூல் இரட்டிப்பாகும்
    - காய்க்காத மா மரங்களைக் காய்க்க வைக்கும் நுட்பங்கள்
    - தண்டுத் துளைப்பானைத் தடுத்து நிறுத்தும் சூத்திரம்

**நோய் மற்றும் பூச்சிக்கட்டுப்பாடு மேலாண்மை குறித்த தகவல்களுக்கு, புஷ்கரம் - வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை. 9688860521 தொலைபேசி என்னை தொடர்புகொண்டு பயன் பெறலாம்**